சரியான ல, ழ, ள கரச் சொற்களை எழுதுக.

1. பூனை ஒன்று_____யில் விழுந்தது.
   நாம் தினமும்_____த்து உடலைச் சுத்தம் செய்ய வேண்டும்.
   குளி / குழி

2. பொதிகை என்பது ஒரு_____யாகும்.
   கனத்த_____ யால் வெள்ளம் ஏற்பட்டது.
   மழை / மலை

3. _____ ங்கள் உடலுக்கு நல்லவை.
   யானை_____ மிகுந்த ஒரு விலங்காகும்.
   பழ / பல

4. கடலில்_____ எழுவதைக் கண்டேன்.
   ஆசிரியர் என்னை_____ த்தார்.
   அழை / அலை

5. மீன்கள் _____ யில் சிக்கின.
   எலி தன் _____ க்குள் புகுந்து கொண்டது.
   வளை / வலை

6. தம்பி வயிற்று _____ யால் அழுதான்.
   கிராமத்திற்குச் செல்லும் _____ தெரியவில்லை.
   வழி / வலி

7. குருவியின் _____ வளைந்து இருந்தது.
   அம்மாவின் சேலை _____மிகுந்தது.
   அழகு / அலகு

8. _____ என்றால் காற்று எனப்படும்.
   _____ என்றால் நோவு என்பதாகும்.
   வளி / வலி

2.2.15

ஆசிரியர் குறிப்பு

- லகர, ழகர, ளகரச் சொற்களை அறிந்து வாசித்தல்.
- சரியான லகர, ழகர, ளகரச் சொற்களைக் கொண்டு வாக்கியங்களை நிறைவு செய்தல்.

LIVEWORKSHEETS